## மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு

**மத்திய மாகாண அரச சேவையில் நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரல் - 2025**

கண்டி மாநகர சபையில் நிறைவேற்று சேவை வகுதியில் சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு தகைமையுடைய உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2025.05.15 திகதியன்று கீழ் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள்** :

1.1 **பொதுத் தகைமைகள்** :

1.1.1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்

1.1.3. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.1.5. 2025.05.15 திகதியன்று 25 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதாவது 2000.05.15 திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக, 1980.05.15 திகதிக்கு அல்லது அதற்கு பின்னரான திகதியை பிறந்த திகதியாக கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கலாம். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ் உயர் வயதெல்லை ஏற்புடையதன்று)

**1.2 கல்வித் தகைமைகள் / தொழிற்றகைமைகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் அல்லது உச்ச நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

**1.3 அனுபவம்:**

உச்சநீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 03 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான தொழிற்சார் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :- இங்கு குறிப்பிட்டுள்ள பட்டம் உள்ளடங்களான அனைத்து தகைமைகளையும் 2025.05.15 திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

## 02. சம்பளம்

பொது நிருவாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் SL 1- 2025 சம்பள அளவுத் திட்டத்திற்கமைய மத்திய மாகாண அரச சேவையின் சட்ட அலுவலர் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் கீழ்வருமாறு

ரூபா. 82, 150 – 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900 – 195,970/-

## 03. சேவை நிபந்தனைகள் :-

**3.1** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும்.

**3.2** மத்திய மாகாண அரச சேவையில் நியமனங்கள் நிர்வகிக்கும் பொது நிபந்தனைகள் மற்றும் அரச/ மாகாண சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்

**3.3** மத்திய மாகாண கௌரவ. ஆளுநரினால் 2013.11.18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண அரசாங்க நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள், அத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

## 04. ஆட்சேர்ப்புமுறை

4.1 விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்காக நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில், மத்திய மாகாண கௌரவ. ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு, அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர் இவ்வெற்றிடப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். .

(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

குறிப்பு: - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

## 05. விண்ணப்பிக்கும் முறை

- முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் “**செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி**” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “மத்திய மாகாண அரசாங்க சேவையில், சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்காக விண்ணப்பங்கள் கோரல்” எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

- தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

(மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

**06.** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் ஆட்சேர்ப்பு அறிவிப்பை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

**07.** இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

**08.** இதன் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

2025 ஜூன் 24 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி

கை/இ :சுஜானி ஆர். விஜேதுங்க
செயலாளர் (பதில்)
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை

,